திரு. பி. சொக்கலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லையென்ற சொல்லுக்கு இடம் கொடுக்காமல் பொற்கால ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கின்ற எனது தெய்வத்தாய் ஆட்சியில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் வரும் காலங்களில் நடைமுறைப்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அதை விரைவில் நடைமுறைப்படுத்துவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதுதான் மானியத்தை நிறைவேற்றி இருக்கிறோம். ஆகவே, இந்த பட்ஜெட் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு இதைப்பற்றி ப்ரிசீலிக்கின்ற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நாங்கள் பரிசீலனைக்கு எடுக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 223, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

223

கொடுமுடியில் அரசு கலைக் கல்லூரி அல்லது பெண்கள் தொழில் நுட்பக் கல்லூரி.

*11756 திருமதி கவிநிலவு தர்மராஜ் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி கொடுமுடியில் அரசு கலைக் கல்லூரி அல்லது பெண்கள் தொழில் நுட்பக் கல்லூரி நிறுவ அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் உரைத்திருக்கிறார்கள். நேற்றைய தினம் மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களும் நூறுமுறை யோசித்த பிறகு கல்லூரியை அமைக்கக் கூடிய எண்ணத்தை நாங்கள் எடுக்க இருக்கிறோம் என்பதை நாங்களும் உணர்ந்திருக்கிறோம். இருந்தாலும் மொடக்குறிச்சி தொகுதியிலே இதுவரை கல்லூரி இல்லாத ஒரு கனவு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

நிலையாக இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால் அரசுத் துறையிலே கல்லூரியை அமைப்பதற்கு வாய்ப்பு இல்லையென்றாலும், சிறுபான்மை இனத்தைச் சார்ந்த தனியார்கள் கல்லூரி அமைக்க முன்வந்தால், அரசு முன் வைப்புத் தொகையாக 10 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டும் என்ற விதியினை சிறிது தளர்த்தி அதை இரண்டு தவணையாக பெற்றுக்கொண்டு தனியார் அமைப்பதற்காகவாவது அரசு ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் விதிகளைத் தளர்த்து வோமானால் நிறைய பேர் இந்தக் கல்லூரிகளை துவக்க முன்வருகிறார்கள். அதனால் வேறுசில பிரச்சினைகள் ஏற்படு கின்றன என்ற காரணத்தினால்தான் இப்படிப்பட்ட நிபந்த னைகளை நாம் விதித்திருக்கிறோம். மற்றப்படி அங்கே கல்லூரியை ஆரம்பிக்க யாரேனும் முன்வருவார்களேயானால் அதுபற்றி முடிவு எடுக்கின்ற நேரத்தில் அவர்களுடைய கோரிக்கையை நாங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 224, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

224—

பழைய ஆயக்குடி அரசு மருத்துவமனைக்கு ஆய்வுக்கூட வசதி

* 9030— திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம் பழைய ஆயக்குடி அரசு மருத்து மனைக்கு ஆய்வுக்கூட வசதி தற்போது இல்லை என்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் அவ்வசதி அங்கு ஏற்படுத்தி தரப்படுமா ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பகுதி 2 திட்டத்தின்கீழ் தேவைக்கேற்பவும், நிதி ஆதாரத்திற்கேற்பவும் ஆயக்குடி அரசு மருத்துவமனையில் ஆய்வுக்கூட வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.